**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC. No.123/2023**

| | |
|---|---|
| Name: ஜோதி | Age: |
| Father's Name:<br>Husband Name : புருஷோத்தமன் | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Junior Assistant and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 05.03.2026 | |

**05.03.2026**

எதிரி ஆஜர்

**விசாரணை தொடங்கிய நேரம் 12.55 PM.**

**எ.த.சா.1 – மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பாப்பநல்லூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்பொழுது என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் நான் வேலைக்கு செல்லவில்லை இல்லத்தரசியாக தான் இருந்து வருகிறேன் . ஏற்கனவே கடை வைத்து நடத்தி வந்தேனா என்றால் இல்லை என்னுடைய மாமனார் மாமியார் தான் கடை நடத்தி வந்தார்கள். ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி காசோலையை புகாதாரருக்கு தான் கொடுத்தேன். சிட்டி யூனியன் வங்கியின் காசோலையை தான் நான் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த காசோலை போதிய பணம் இல்லாமையால் திருப்பப்பட்டது என்றால் சரிதான் அந்த வங்கி கணக்கில் எப்பொழுதும் பணம் இருந்தது இல்லை. மேற்படி விவரம் தெரிந்து கொண்டு தான் நான் காசோலை கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் மனுதாரர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் சென்னையில் உள்ள வழக்கறிஞரை வைத்து பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை நான் இந்த ஊரில் உள்ள திரு

ஆதிகேசவன் வழக்கறிஞரிடம் தான் பதில் அறிவிப்பு தயார் செய்து கொடுத்தேன்.

ம.சா.ஆ.4 ல் எந்த வழக்கறிஞரையும் எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல். பாரதி கண்ணன் என்பவர் என்னுடைய மகன். எ.ம.சா.ஆ.1 ற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் உண்டு என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலைக்கும் எ.ம.சா.ஆ1 ற்கும் சம்பந்தமில்லை அது என்னுடைய மகன் வழங்கிய காசோலைக்கான ஆவணம் ஆகும். எ.ம.சா.ஆ.2 ன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி புகாரிணை காவல் நிலையத்தில் பெற்றுக் கொண்டதற்கான சி.எஸ்.ஆர் ஏதேனும் வழங்கப்பட்டது என்றால் இல்லை. மேற்படி புகார் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஒன்று என்றாலும் நான் இது போன்ற புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் மேலே குறிப்பிட்டவாறு திரு ஆதிகேசவன் வழக்கறிஞரிடம் இருந்து தயார் செய்து கொடுத்த பதில் அறிவிப்பினை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் எதிரிக்கு ரூபாய் ஐந்து லட்சம் கடன் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல மூன்று லட்சம் கடன் வாங்கினேன் அதில் ரூபாய் ஒரு லட்சத்தை மாதாந்திரம் 12,500 ரூபாயாக செலுத்தி விட்டேன் மீதம் 2 லட்சம் நான் புகாதாரருக்கு கொடுக்க வேண்டியதாகும். நீதிமன்றத்தின் வழக்கு நகல்களை பெற்றவுடன் வழக்கு குறித்து என்னிடம் வினவையபொழுது மேற்படி விவரத்தை நான் தெரிவித்தேனா என்றால் தெரிவித்து. நான் சொல்வது தவறு என்றாலும் நான் ஐந்து லட்சம் ரூபாய் தான் கடன் பெற்றேன் என்றாலும் அந்த தொகையை வட்டியுடன் நான் செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல்

நீதிமன்றம் கேள்வியின் போது நான் மேற்படி விவரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்த வழக்கு சரியான வழக்கு என்றாலும் அவர் வேண்டும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 1.10 PM**

**Sd/R.கிருத்தியா,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**

**உத்திரமேரூர்.**